ABATE AS
INDUSTRIES LIMITED
(FORMERLY KNOWN AS TRIJAL INDUSTRIES LIMITED)

Regd. Office : SF No. 348/1, Ettimadai Village,
Kg Chavady (Atm), Coimbatore, Tamil Nadu - 641105, India.
E-mail: abateasindustries@gmail.com | www.abateas.com

CIN: L65990TZ1991PLC029162

**14.02.2025**

To,
Department of Corporate Services
Bombay Stock Exchange Limited
Phiroze Jee Jee Bhoy Towers
Dalal Street Mumbai - 400 001.

Dear Sir /Madam

**Scrip Code: 531658**

**Subject: Submission of Newspaper Advertisement relating to the Unaudited Financial Results for the quarter and nine months ended 31st December, 2024**

Pursuant to the provisions of the Companies Act 2013 and SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations 2015, we are enclosing herewith the advertisement in connection with Unaudited financial results for the quarter and Nine months ended 31st December, 2024 published on Thursday 13th February, 2025 in the following newspapers:

| Name of the Newspaper | Edition |
|---|---|
| Hindu Tamil Thisai | Tamil |
| Business Standard | English |

Kindly take the same on records.

Thanking you,

Yours Faithfully
For **ABATE AS INDUSTRIES LIMITED**

**Dr. Adv Arikuzhiyan Samsudeen**
**Director**
**DIN: 01812828**

ABATE AS INDUSTRIES LIMITED

## சின்ன சின்னதாய்

### திமுகவில் திருப்பூர் மாவட்டம் நான்காக பிரிக்கப்பட்டு பொறுப்பாளர்கள் நியமனம்

**திருப்பூர்**

திமுகவில் திருப்பூர் மாவட்டம் வடக்கு, தெற்கு என 2 ஆக பிரிக்கப்பட்டு, வடக்கு மாவட்ட செயலாளராக க.செல்வராஜ் எம்எல்ஏ,தெற்கு மாவட்ட செயலாளராக இல.பத்மநாபன் ஆகியோர் செயல்பட்டு வந்தனர்.

தற்போது, ஒரு மாவட்டத்துக்கு இரண்டு சட்டப்பேரவைத் தொகுதிகள் வரும் வகையில், திருப்பூர் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என 4 ஆக பிரிக்கப்பட்டு, பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, திருப்பூர் கிழக்கு மாவட்டம் (பல்லடம், திருப்பூர் தெற்கு தொகுதிகள்) பொறுப்பாளராக க.செல்வராஜ் எம்எல்ஏ, திருப்பூர் மேற்கு மாவட்டம்(காங்கயம், தாராபுரம் தொகுதிகள்) பொறுப்பாளராக அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் வடக்கு மாவட்டம் (அவிநாசி, திருப்பூர் வடக்கு தொகுதிகள்) பொறுப்பாளராக மேயர் என்.தினேஷ்குமார், திருப்பூர் தெற்கு மாவட்டம் (உடுமலை, மடத்துக்குளம் தொகுதிகள்) பொறுப்பாளராக இல.பத்மநாபன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனை தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.



டெல்லியில் மத்திய ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவை நேற்று சந்தித்து கோரிக்கை மனு அளித்த திருப்பூர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் கே.சுப்பராயன்.

### அகல ரயில் பாதை திட்டங்களை விரைந்து நிறைவேற்ற திருப்பூர் எம்.பி. வலியுறுத்தல்

**திருப்பூர்**

டெல்லியில் மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவை நேற்று சந்தித்து, திருப்பூர் மக்களவைத் தொகுதி உறுப்பினர் சுப்பராயன் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது: திருப்பூர் மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட சத்தியமங்கலம் கோபி, ஈரோடு அகல ரயில் பாதை திட்டத்தையும், சத்தியமங்கலம்– அந்தியூர்– மேட்டூர் ரயில் பாதை திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டும். இதன்மூலம், பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த பல லட்சம் தொழிலாளர்கள் பயன்பெறுவர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. அப்போது, நாகப்பட்டினம் மக்களவைத் தொகுதி உறுப்பினர் செல்வராஜ் உடனிருந்தார்.

### போக்சோவில் தொழிலாளி கைது

**திருப்பூர்**

திருப்பூரை சேர்ந்தவர் சந்தோஷ் (29). பனியன் தொழிலாளி. இவர், 12 வயது சிறுமிக்கு தொடர்ந்து பாலியல் தொல்லை கொடுத்து வந்தார். இதையறிந்த சிறுமியின் பெற்றோர், திருப்பூர் கொங்கு நகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன்பேரில் போக்சோ வழக்கு பதிந்து சந்தோஷை நேற்று போலீஸார் கைது செய்தனர்.

# வனப்பகுதியில் தீ தடுப்புக்கோடு அமைக்க குறைந்தபட்ச கூலி கூட தருவதில்லை

## வனத்துறையினர் மீது மலைவாழ் மக்கள் குற்றச்சாட்டு

**உடுமலை**

திருப்பூர் வனக் கோட்டத்தில் தீ தடுப்புக்கோடுகள் அமைக்க ரூ.94.61 லட்சம் நிதி ஒதுக்கியும், தினசரிஒருவருக்குரூ.200மட்டுமே கூலியாக வனத்துறையினர் தருவதாக மலைவாழ் மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

ஆனைமலைபுலிகள்காப்பகத்துக்கு உட்பட்ட திருப்பூர் வனக் கோட்டம் சுமார் 608 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது. உடுமலை, அமராவதி, கொழுமம், காங்கயம், வந்தரவு ஆகிய வனச்சரகங்கள் இந்த வனக்கோட்டத்தில் அடங்கும். கோடை காலத்தில் வனப்பகுதியில் இயற்கையாக ஏற்படும் தீ விபத்துகளை தடுக்கும் வகையில் ஆண்டு தோறும் கோடை காலத்துக்கு முன்பே தீ தடுப்புக்கோடுகள் அமைப்பது வழக்கம்.

அதேபோல இந்த ஆண்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக அரசு ரூ.94.61 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மலைவாழ் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், இப்பணிகளில் அவர்களையே ஈடுபடுத்த வேண்டும் என அரசு அறிவுறுத்தி உள்ளது. இந்நிலையில் ஒரு சில வனச்சரகங்களை தவிர, மற்ற வனச்சரகங்களில் தனியார் ஒப்பந்ததாரர்கள் மூலம் இப்பணிகள் நடைபெற்று வருவதாகவும், மலைவாழ் மக்களுக்கு உரிய ஊதியம் வழங்கவில்லை எனவும் மலைவாழ்மக்கள்புகார் தெரிவித்துள்ளனர்.



உடுமலை அருகே வனப்பகுதியில் தீ தடுப்புக்கோடுகள் அமைக்கும் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்கள்.

இதுகுறித்து அவர்கள் கூறியதாவது: ஆனைமலை புலிகள் காப்பகத்துக்கு உட்பட்ட வனப்பகுதியில் காய்ந்த புற்கள், செடி, கொடிகளை அகற்றி வனத்தீ ஏற்படாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தீ தடுப்புக்கோடு அமைக்கப்படுவது வழக்கம். போதிய வேலைவாய்ப்பில்லாமல் தவிக்கும் மலைவாழ் மக்களுக்குஇப்பணிகளைஒதுக்க அரசு உத்தரவிட்டுள்ளது. ஆனால் இரண்டரை ஏக்கருக்கு ரூ.10,000 அல்லது ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.6,000 மட்டுமே ஊதியம் வழங்க முடியும் என வனத்துறையினர் கூறுகின்றனர். ஒரு கி.மீ. தொலைவுக்கு தீ தடுப்புக்கோடு அமைக்க சுமார் 30 பேர் வரை ஈடுபட வேண்டும்.

அப்படியானால் ஒரு நபருக்கு நாளொன்றுக்கு ரூ.200 மட்டுமே ஊதியமாக கிடைக்கும். விவசாயக் கூலி வேலைக்குச் சென்றால்கூட நாளொன்றுக்கு ரூ.600 வரை ஊதியம் கிடைக்கும். வனத்துறையினர் தன்னிச்சையாக நிர்ணயித்த குறைந்த கூலி அடிப்படையில் யாருமே பணிபுரிய வரமாட்டார்கள்.

எனவே வனத்துறையினர் ஒப்பந்ததாரர்களைக் கொண்டு சில இடங்களில் தீ தடுப்புக்கோடுகளை அமைத்துள்ளனர். சில இடங்களில் கண் துடைப்புக்காக மட்டுமே தீ தடுப்புக்கோடுகள் அமைக்கப்பட்டுள்ளன. வனத்தில் தீ ஏற்பட்டால், அரிய வகை மரங்கள், பறவைகள், விலங்கினங்கள் அழியும் அபாயம் உள்ளது, என்றனர்.

இதுகுறித்து வனத்துறையினர் கூறும்போது, "உடுமலை, அமராவதி,கொழுமம், வந்தரவு ஆகிய வனச்சரகங்களில் நிர்ணயிக்கப்பட்ட தொலைவில் பெரும் பகுதியில் தீ தடுப்புக்கோடுகள் அமைத்து விட்டோம். மலைவாழ் மக்கள் புகார் குறித்து முறையாக தெரிவித்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்றனர்.

### கணக்காளரிடம் ரூ.8.48 லட்சம் பறிக்கப்பட்டதாக புகார்

**திருப்பூர்**

பனியன் நிறுவன கணக்காளரிடம் ரூ.8.48 லட்சம் பறிக்கப்பட்டது தொடர்பாக போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருப்பூர் காங்கயம் சாலை கதிர் லே-அவுட்டை சேர்ந்தவர் தாஜுதீன் (74). பனியன் நிறுவனத்தில் கணக்காளராக வேலை செய்து வருகிறார். இவர் நேற்று நிறுவனத்தில் இருந்து ரூ.8 லட்சத்து 48 ஆயிரத்தை எடுத்துக் கொண்டு காங்கயம் சாலையில் உள்ள எஸ்பிஐ வங்கிக்கு சென்றார். வங்கி அருகே சென்றபோது காரில் வந்த 3 பேர் கொண்ட கும்பல், பணப்பையை அவரிடம் பறித்துக்கொண்டு தப்பியதாக கூறப்படுகிறது.

இதுதொடர்பாக தாஜுதீன் அளித்த புகாரின் அடிப்படையில் நல்லூர் போலீஸார் விசாரிக்கின்றனர்.

சம்பவம் நிகழ்ந்த பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை கைப்பற்றி உள்ளனர்.மேலும் புகாரில் உண்மைத்தன்மை உள்ளதா என்பது தொடர்பாக தாஜுதீனிடம் தொடர்ந்து விசாரித்து வருவதாக போலீஸார் தெரிவித்தனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று மனு அளிக்க வந்த நாம் தமிழர் கட்சியினர். படம்: இரா.கார்த்திகேயன்

## மாணவர்கள் பாதுகாப்புக்கு சிறப்பு குழு அமைக்க நாம் தமிழர் கட்சியினர் வலியுறுத்தல்

**திருப்பூர்**

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நாம் தமிழர் கட்சியின் திருப்பூர்தெற்கு சட்டப் பேரவைத் தொகுதி சார்பில் மாநில மகளிரணி பாசறை செயலாளர் சீதாலட்சுமி, தெற்கு மாவட்ட தலைவர் ரத்னா மனோகர் மற்றும் நிர்வாகிகள் நேற்று அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:

திருப்பூர் மாநகராட்சி பள்ளியில் மாணவர்களிடம் அநாகரீகமாக நடந்துகொண்ட கணித ஆசிரியர் சுந்தரவடிவேல் (52) என்பவர் போக்சோ வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார். தற்போது அவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட நிலையில், அவரது கல்விச் சான்றிதழ்கள் ரத்து செய்யப்பட வேண்டும். மேலும், அவரை எந்த அரசு மற்றும் தனியார் பள்ளிகள் கல்வி நிறுவனங்களில் வேலை செய்ய அனுமதிக்கக் கூடாது என்று அரசு சான்றிதழ் வழங்க வேண்டும்.

இதேபோல் தமிழ்நாடு முழுவதும் போக்சோ வழக்குகளில் கைதான ஆசிரியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து அரசுப் பள்ளி மற்றும் கல்லூரிகளில் மாணவர்கள் பாதுகாப்பாகவும், ஆரோக்கியமாகவும் கல்வியை மேற்கொள்ள குழு ஒன்றை அமைக்க வேண்டும். அந்த குழு வாயிலாக மாணவர்களுக்கு அவர்களின் உரிமை, மன வலிமை, பாதுகாப்பற்ற சூழலை அணுகும் முறைகளை கற்றுக்கொடுக்க வேண்டும், என கூறப்பட்டுள்ளது.

இதே கோரிக்கை மனுவை, திருப்பூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமும் நாம் தமிழர் கட்சியினர் வழங்கி, நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

## அலகுமலையில் 16-ல் ஜல்லிக்கட்டு முன்னேற்பாடு பணிகள் தீவிரம்

**திருப்பூர்**


திருப்பூர் அருகே அலகுமலையில் வரும் 16-ம் தேதி ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற உள்ளது.

இதில் பங்கேற்பதற்காக தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 600 மாடுபிடி வீரர்கள், இணையத்தில் பதிவு செய்துள்ளனர். காளைகள் பதிவுக்கு அரசின் அனுமதிக்காக காளை வளர்ப்பாளர்கள் காத்திருக்கின்றனர். ஜல்லிக்கட்டு போட்டியை பொதுமக்கள் பார்வையிட வசதியாக ஜல்லிக்கட்டு நடைபெறவுள்ள பகுதியை சுற்றிலும் கேலரிகள் அமைக்கும் பணி மற்றும் வாடிவாசல் அமைக்கும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

வாடிவாசலில் இருந்து மாடுகள் வெளியேறும் பகுதியில் தேங்காய் நார் நிரப்பும் பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. மாடுகள் அழைத்து வரும் பகுதி, வெளியேற்றும் இடம் உட்பட போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை அலகுமலை ஜல்லிக்கட்டு காளைகள் நலச்சங்க நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.



அலகுமலையில் ஜல்லிக்கட்டு நடைபெறவுள்ள இடத்தில் அமைக்கப்பட்டுள்ள வாடிவாசல் மற்றும் கேலரி.



திருப்பூர் காங்கயம் சாலையை நேற்று காலை 8 மணிக்கு சூழ்ந்த பனி.

### திருப்பூரில் கடும் பனியால் மக்கள் அவதி

**திருப்பூர்**

திருப்பூர் மாநகரில் கோடை காலம் தொடங்கும் முன்பே பகல் நேரங்களில் வெயில் கொளுத்தி வருகிறது. அதேவேளையில், அதிகாலை நேரத்தில் பனியின் தாக்கமும் அதிகமாக உள்ளது. நேற்று காலை திருப்பூர் மாநகரின் பல்வேறு பகுதிகளில் பனி சூழ்ந்தது.

நகரெங்கும் பனிப்போர்வை போன்று படர்ந்ததால், திருப்பூர் தாராபுரம் சாலை, காங்கயம் சாலை, மத்திய பேருந்து நிலையம், குமரன் சாலை, அவிநாசி சாலை உட்பட மாநகரின் பல்வேறு பகுதிகளில் வாகன ஓட்டிகள் அவதியடைந்தனர். காலை 8 மணி வரை முகப்பு விளக்குகளை ஒளிரவிட்டபடி வாகனங்களை இயக்கினர்.

esh.v@hindutamil.co.in

### ஆதாரில் திருத்தம் மேற்கொள்ள இன்று சிறப்பு முகாம் தொடக்கம்

**திருப்பூர்**

அவிநாசியில் 3 நாட்கள் ஆதார் சிறப்பு முகாம் இன்று தொடங்க உள்ளதாக திருப்பூர் அஞ்சலக கோட்ட கண்காணிப்பாளர் பட்டாபிராமன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

இந்திய அஞ்சல் துறை மற்றும் ரோட்டரி சார்பில் ஆதார் சிறப்பு முகாம் இன்று (பிப்.14) முதல் வரும் 16-ம் தேதி வரை, அவிநாசி பெரிய கோவில் பின்புறம் மங்கலம் சாலையில் உள்ள ரோட்டரி அரங்கில் நடைபெற உள்ளது. இந்த முகாமில் ஆதார் எடுத்தல், பெயர், பிறந்த தேதி மாற்றம், செல்போன் எண் மாற்றம், கைரேகை மாற்றம் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளலாம். இந்த முகாமை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**அபேட் அஸ் இன்டஸ்டிரீஸ் லிமிடெட்** (முன்னதாக அறியப்படுவது டிரிஜல் இன்டஸ்டிரீஸ் லிமிடெட்)

பதிவு அலுவலகம் : SF எண்.348/1, எட்டிமடை கிராமம், C.G. புதூர் சாலை, K.G. சாவடி, HL பேமிலிஸ், கெண்டிகவுடண்டன் சாலை, கோயம்புத்தூர்-641105

மின்னஞ்சல் : abateasindustries@gmail.com I Website : www.abateas.com I CIN : L65990TZ1991PLC029162

**31.12.2024-ல் முடிவடைந்த காலண்டு மற்றும் ஒன்பது மாதங்கள் தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் சுருக்கங்கள்**

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண். | விவரங்கள் | காலண்டு முடிவு | | | அரையாண்டு முடிவு | | ஆண்டு முடிவு |
|---|---|---|---|---|---|---|---|
| | | 31.12.2024 | 30.09.2024 | 31.12.2023 | 31.12.2024 | 31.12.2023 | 31.03.2024 |
| | | தணிக்கை செய்யவில்லை | தணிக்கை செய்யவில்லை | தணிக்கை செய்யவில்லை | தணிக்கை செய்யவில்லை | தணிக்கை செய்யவில்லை | தணிக்கை செய்யப்பட்டது |
| 1 | செயல்பாடுகளின் மொத்த வருமானம் (net) | - | - | - | - | - | - |
| 2 | காலத்திற்கான நிகர இலாபம்/(இழப்பு) (வரிக்கு முந்தைய, விதிவிலக்கு மற்றும்/அல்லது அசாதாரண பொருட்களுக்கு) | -2.31 | -2.69 | -1.74 | -8.53 | -75.19 | -91.12 |
| 3 | காலத்திற்கான நிகர இலாபம்/(இழப்பு) (வரிக்கு முந்தைய மற்றும் விதிவிலக்கு பின்பு மற்றும்/அல்லது அசாதாரண பொருட்களுக்கு) | -2.31 | -2.69 | -1.74 | -8.53 | -75.19 | -91.12 |
| 4 | காலத்திற்கான நிகர இலாபம்/(இழப்பு) (வரிக்கு பின்பு மற்றும் விதிவிலக்கு பின்பு மற்றும்/அல்லது அசாதாரண பொருட்களுக்கு) | -2.31 | -2.69 | -1.74 | -8.53 | -75.19 | -91.12 |
| 5 | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [காலத்திற்கான இலாபம்/(இழப்பு) (வரிக்குப்பின்) மற்றும் மற்ற விரிவான வருமானம் (வரிக்குப் பின்)] | -2.31 | -2.69 | -1.74 | -8.53 | -75.19 | -91.12 |
| 6 | ஈக்விட்டி பங்கு மூலதனம் | 501.61 | 501.61 | 501.61 | 501.61 | 501.61 | 501.61 |
| 7 | தொடர்ந்த மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கு ஒரு பங்குக்கான வருவாய் (அசாதாரண பொருட்களுக்கு முன் (தலா ரூ.10/-) அடிப்படை மற்றும் குறைந்த | -0.05 | -0.05 | -0.04 | -0.17 | -1.50 | -1.82 |

குறிப்பு :
1. மேலே உள்ள முடிவுகள் தணிக்கைக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, பின்னர் 12.02.2025 அன்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தில் இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.
2. முந்தைய காலாண்டுகள்/ஆண்டுகளுக்கான புள்ளிவிவரங்கள் தேவையான இடங்களில் மீண்டும் தொகுக்கப்பட்டடு/அல்லது வகைப்படுத்தப்பட்டுள்ளன.
3. நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் மேற்கண்ட காலண்டு நிதி முடிவுகளின் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வை மேற்கொண்டுள்ளனர்.
5. Ind AS-108-ன்படி காலாண்டிற்கான பிரிவு அறிக்கை பொருந்தாது.
6. 31.12.2024 நிலவரப்படி நிறுவனம் ரூ.9.53 இலட்சம் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்தை வைத்திருக்கிறது. ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்தைப் பயன்படுத்துவதற்கு நிறுவனம் போதுமான வரி விதிக்கக்கூடிய லாபத்தை ஈட்டும் என்பதில் நிர்வாகம் உறுதியாக உள்ளது. அதன்படி ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்தின் குறிப்பிட்ட தொகைக்கு தற்போது எந்த சரிசெய்தலும் நிர்வாகத்தால் பரிசீலிக்கப்படவில்லை.

அபேட் அஸ் இன்டஸ்டிரீஸ் லிமிடெட்-க்காக
Sd/-
Dr. வழக்கறிஞர் அரிகுழியன் சம்சுதீன்
தலைவர் மற்றும் நிர்வாகமற்ற இயக்குநர்
DIN : 01812828

நாள் : 12.02.2025
இடம் : கோயம்புத்தூர்

**Sakthi Finance**
Since 1955

**சக்தி பைனான்ஸ் லிமிடெட்**
(CIN : L65910TZ1955PLC000145)

**பதிவு அலுவலகம் :** 62, டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயமுத்தூர் – 641 018 **போன் :** (0422) 2231471 - 474, 4236200
**ஃபேக்ஸ் :** (0422) 2231915 **மின்னஞ்சல் :** investors@sakthifinance.com **வலைதளம் :** www.sakthifinance.com

**31 டிசம்பர் 2024 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்** (ரூபாய் லட்சங்களில்)

| விபரங்கள் | முடிவடைந்த காலாண்டு | | | முடிவடைந்த ஒன்பது மாதங்கள் | | முடிவடைந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|---|
| | 31.12.2024 | 30.09.2024 | 31.12.2023 | 31.12.2024 | 31.12.2023 | 31.03.2024 |
| | (தணிக்கை செய்யப்படாதது) | (தணிக்கை செய்யப்படாதது) | (தணிக்கை செய்யப்படாதது) | (தணிக்கை செய்யப்படாதது) | (தணிக்கை செய்யப்படாதது) | (தணிக்கை செய்யப்பட்டது) |
| செயல்பாடுகள் மூலம் கிடைத்த மொத்த வருமானம் (நிகர) | 5,479.26 | 5,429.23 | 5,220.81 | 16,229.00 | 15,258.39 | 20,674.11 |
| காலாண்டு / ஒன்பது மாதங்களுக்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி மற்றும் அசாதாரண செயல்பாடுகளுக்கு முன்) | 601.18 | 570.19 | 582.98 | 1,718.61 | 1,556.58 | 2,147.79 |
| காலாண்டு / ஒன்பது மாதங்களுக்கான வரிக்கு முந்தைய நிகர லாபம்/(நஷ்டம்) (அசாதாரண செயல்பாடுகளுக்கு பின்) | 601.18 | 570.19 | 582.98 | 1,718.61 | 1,556.58 | 2,147.79 |
| காலாண்டு / ஒன்பது மாதங்களுக்கான வரிக்குப் பிந்தைய நிகர லாபம்/(நஷ்டம்) (அசாதாரண செயல்பாடுகளுக்கு பின்) | 459.71 | 357.24 | 432.05 | 1,205.76 | 1,152.03 | 1,570.54 |
| இதர விரிவான வருமானம் (நிகர வரிக்கு) | (28.93) | (8.14) | (15.12) | 3.26 | 37.10 | 32.08 |
| மொத்த விரிவான வருமானம் [லாபத்தை உள்ளடக்கியது (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (நிகர வரிக்கு)] | 430.78 | 349.10 | 416.93 | 1,209.02 | 1,189.13 | 1,602.62 |
| செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முக மதிப்பு ₹ 10 பங்கு ஒன்றிற்கு) | 6,470.59 | 6,470.59 | 6,470.59 | 6,470.59 | 6,470.59 | 6,470.59 |
| காப்பு நிதி (மறுமதிப்பீட்டு காப்பு நிதி நீங்கலாக) | - | - | - | - | - | 12,943.34 |
| பத்திரங்களின் பிரீமியம் கணக்குகள் | 1,429.80 | 1,429.80 | 1,429.80 | 1,429.80 | 1,429.80 | 1,429.80 |
| நிகர மதிப்பு | 19,536.61 | 19,079.40 | 18,599.66 | 19,536.61 | 18,599.66 | 18,979.48 |
| செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / நிலுவை கடன் | 0.49 | 0.51 | 0.34 | 0.49 | 0.34 | 0.45 |
| நிலுவையில் உள்ள மீட்கப்படக்கூடிய முன்னுரிமை பங்குகள் | NA | NA | NA | NA | NA | NA |
| கடன் பங்கு விகிதம் | 5.92 | 6.14 | 6.16 | 5.92 | 6.16 | 6.23 |
| ஒரு பங்கிற்கான லாபம் (முக மதிப்பு ₹ 10 பங்கு ஒன்றிற்கு) (தொடர் செயல்பாடுகளுக்கானது) : | | | | | | |
| a. அடிப்படை (₹) | 0.71 | 0.55 | 0.67 | 1.86 | 1.78 | 2.43 |
| b. குன்றியது (₹) | 0.71 | 0.55 | 0.67 | 1.86 | 1.78 | 2.43 |
| மூலதன மீட்பு இருப்பு | NA | NA | NA | NA | NA | NA |
| கடன் பத்திர மீட்பு இருப்பு | NA | NA | NA | NA | NA | NA |
| கடன் சேவை பாதுகாப்பு விகிதம் | NA | NA | NA | NA | NA | NA |
| வட்டி சேவை பாதுகாப்பு விகிதம் | NA | NA | NA | NA | NA | NA |

**குறிப்புகள் :**
1. மேலே கொடுக்கப்பட்டுள்ள இந்த காலாண்டு / ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் செபி (பங்குப்பட்டியலிடும் கடமை மற்றும் காண்பிக்க வேண்டிய தேவைகள்) விதிகள் 2015, விதி 33 மற்றும் விதி 52-ன் படி (விதி 63(2) உடன் இணைத்து படிக்கவும்) மும்பை பங்குச் சந்தையில் விவரமாக பதிவு செய்யப்பட்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கமாகும். இந்த காலாண்டு / ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் விரிவான விபரங்களை மும்பை பங்குச் சந்தையின் இணையதளம், (URL:www.bseindia.com/corporates) மற்றும் கம்பெனியின் இணையதளம், www.sakthifinance.com ஆகியவற்றில் காணப் பெறலாம். கீழே கொடுக்கப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் மேலே உள்ள விரிவான தணிக்கை செய்யப்படாத நிதி நிலை முடிவுகளை காணப் பெறலாம்.
2. செபி (பங்குபட்டியலிடும் கடமை மற்றும் காண்பிக்க வேண்டிய தேவைகள்) விதிகள், 2015, விதி 52 (4)-ன் படி (விதி 63(2) உடன் இணைத்து படிக்கவும்) கொடுக்கப்பட வேண்டிய இதர விபரங்கள் மும்பை பங்குச் சந்தையின் இணையதளம், (URL:www.bseindia.com/corporates) மற்றும் கம்பெனியின் இணையதளம், www.sakthifinance.com ஆகியவற்றில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்டவற்றை கீழே கொடுக்கப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் காணப் பெறலாம்.

இயக்குநர்கள் குழுவின் உத்தரவுப்படி
சக்தி பைனான்ஸ் லிமிடெட்டிற்காக
**ம. பாலசுப்ரமணியம்**
உப தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்
DIN : 00377053

12 பிப்ரவரி 2025
கோயமுத்தூர் – 18

**Twamev Construction and Infrastructure Limited (formerly Tantia Constructions Limited)**
**CIN: L74210WB1964PLC026284**
**Corporate Office: Martin Burn Business Park, 17th Floor,Office No. 1704,Plot 3, Block BP, Sector V, Salt Lake City, Kolkata - 700 091**

Twamev Construction and Infrastructure Limited (Formerly known as Tantia Constructions Limited)

**Extract of Un-audited Financial Results for the Quarter ended 31st December, 2024**

(Rs. in Lakhs)

| Particulars | Standalone | | | Consolidated | | |
|---|---|---|---|---|---|---|
| | Three months ended 31-Dec-24 (Un-Audited) | Three months ended 31-Dec-23 (Un-Audited) | Year ended 31-Mar-24 (Audited) | Three months ended 31-Dec-24 (Un-Audited) | Three months ended 31-Dec-23 (Un-Audited) | Year ended 31-Mar-24 (Audited) |
| Total Income from Operations (Net) | 1,507 | 809 | 5,305 | 1,507 | 809 | 5,305 |
| Profit/(loss) from ordinary activities before Tax | 183 | 1,936 | 3,839 | 177 | 60 | (1,816) |
| Net Profit/(Loss) from ordinary activities after Tax | 183 | 1,466 | 8,994 | 177 | 60 | (2,222) |
| Total Comprehensive Income/ (Loss) for the period (Net of Tax) | 183 | 1,466 | 9,002 | 177 | 60 | (2,214) |
| Paid-up equity share capital (Face Value of Rs. 1/- per share) | 1,550 | 1,550 | 834 | 1,550 | 1,550 | 834 |
| Earning per share (Basic & Diluted) (Face value of Rs. 1/- each) (Not annualised) | 0.12 | 0.95 | 10.79 | 0.11 | 0.04 | (2.65) |

**Note:**
The above is an extract of the detailed format of un-audited Financial Results filed with the Stock Exchange under Regulation 33 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Un-audited Financial Results are avaialable on the stock Exchange websites (www.bseindia.com and www.nseindia.com) and the company website (www.twamevcons.com)

**Date: 12th February, 2025**
**Place: Kolkata**

**For Twamev Construction and Infrastructure Limited**
**Neha Agarwal**
**Company Secretary**

# ABATE AS INDUSTRIES LIMITED

(Formerly known as Trijal Industries Limited)
Regd. Office: SF NO 348/1, Ettimadai Village, C.G. Pudur Road K G Chavady HL Families, Kandegounden Salai, Coimbatore- 641105
**Email:** abateasindustries@gmail.com | **Website:** www.abateas.com
**CIN : L65990TZ1991PLC029162**

**Extract of Statement of Unaudited Financial Results for the Quarter and nine months ended 31.12.2024**

(Rs. In Lakhs)

| Sr. No. | Particulars | Quarter Ended | | | Nine months ended | | Year Ended |
|---|---|---|---|---|---|---|---|
| | | 31.12.2024 | 30.09.2024 | 31.12.2023 | 31.12.2024 | 31.12.2023 | 31.03.2024 |
| | | (Unaudited) | (Unaudited) | (Unaudited) | (Unaudited) | (Unaudited) | (Audited) |
| 1 | Total Income from operations (net) | - | - | - | - | - | - |
| 2 | Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and / or Extraordinary Items) | -2.31 | -2.69 | -1.74 | -8.53 | -75.19 | -91.12 |
| 3 | Net Profit / (Loss) for the period (before Tax and after Exceptional and / or Extraordinary Items) | -2.31 | -2.69 | -1.74 | -8.53 | -75.19 | -91.12 |
| 4 | Net Profit / (Loss) for the period (after Tax and after Exceptional and / or Extraordinary Items) | -2.31 | -2.69 | -1.74 | -8.53 | -75.19 | -91.12 |
| 5 | Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)] | -2.31 | -2.69 | -1.74 | -8.53 | -75.19 | -91.12 |
| | Equity Share Capital | 501.61 | 501.61 | 501.61 | 501.61 | 501.61 | 501.61 |
| | Earnings per Share (before extraordinary items (of Rs.10/- each) for continued and discontinued operations Basic and Diluted | -0.05 | -0.05 | -0.04 | -0.17 | -1.50 | -1.82 |

**NOTES:**
1. Above results were reviewed by Audit Committee and subsequently approved by the Board of Directors in their Board Meeting held on 12th February, 2025
2. Figures for the prior periods/years have been regrouped and/or classified wherever considered necessary.
3. The Statutory Auditors of the company have carried out the Limited Review of the above quarterly financial results.
4. Segmental Report for the quarter as per Ind AS-108 is not applicable.
5. The company is carrying deferred tax asset of Rs 9.53 Lacs as on 31 December,2024.Management is reasonably certain that the Company will earn sufficient taxable profit in future to utilise the Deferred Tax Asset. Accordingly no adjustment is currently considered by the Management to the said amount of deferred tax asset.

**For ABATE AS INDUSTRIES LIMITED**
**sd/-**
**DR.ADV. ARIKUZHIYAN SAMSUDEEN**
**Chairman Cum Non-Executive Director**
**DIN: 01812828**

**DATE : 12.02.2025**
**PLACE : COIMBATORE**

Companies,
**Insight Out**



Companies, **Monday to Saturday**

To book your copy, sms **reachbs** to **57575** or email **order@bsmail.in**

Business Standard
50 Years of Insight